ஓலை 32 | ஓசை 126 | பிப்ரவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

**நிர்வாக குழு**

**கு.செல்வமுத்துக்குமரன்**

**சிவம் அறக்கட்டளை**

**ஆசிரியர்கள்**

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

**வடிவமைப்பு**

**அ.வில்சன்**

**அலுவலக முகவரி**

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,**
**மயிலாடுதுறை - 609001**

**அகர முதல இலக்கிய பேரவை**

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தைப்பூசம்



ஐயிரு மாதமாம் தைமாதம் தமிழுருக்கு
ஐயமின்றி சொல்லலாம் அருமைமிகு மாதமென்று;
ஐமுக சிவனின் அறுமுகப் புதல்வனாம்
ஐயன்முருகனுக் குகந்ததுதைப்பூ சநன்னாளென்பதால்!

நட்சத்திரங்களில் எட்டவதாய் அமைந்த பூசத்தில்
நிலவு முழுநிலவாய் வரும்நாளில் தைப்பூசம்
நிலவுலக மெங்கும் கொண்டாடப்படும் விழாவாகுமே!
குன்றிருக்கு மிடமெல்லாம் குமரனிருக்கும் இடம்மென்று
குவலயம் வாழ்வோருரைத்தது பழமொழியாகி இன்று
குவலயமெங்கும் தமிழர்வாழ்விட மெல்லாம் தமிழிறைவன்
குமரனிருக்கு மிடமாகியது என்றபுதுமொழி வந்ததே!

குமரனுக்கு தமிழரெடுக்கும் நல்லதொருவிழா தைப்பூசவிழா!
தைப்பூசத்தன் றிந்தப்புவியும் தோன்றியதாயும் சொல்வோருளர்;
தைப்பூசத்தில் சிவனுமாதேவி யுடனிருக்க சிதம்பரத்தில்
உயிர்களின்பமுற ஆனந்த தாண்டவம் ஆடியருளினார்!
உயிர்க்கு உன்னதநிலை அளிக்கும் நடராசருக்கு
எண்ணற்ற நற்பணிகள் பலவும் செய்த
ஏற்றமிகு அரசன் இரணியவர்மன் நடராஜரை
நேருக்கு நேராக தரிசித்தானொரு தைப்பூசத்தில்!
ஆதலாலிந்த தைப்பூசம் ஆலகால விடமுண்ட
ஆலவாயண்ணலாம் ஈசனாரை வணங்கவோர் நன்னாளே!



வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய அருளாளர்
வள்ளலார்ஜோதி வழிப்பாட்டில் நின்றுயர்ந்து தன்னைத்தானே
ஒளியுடம்பாய் மாற்றியொளியோடு ஒளியானதுவொரு தைப்பூச மே!
ஒளியாயின்றும் வள்ளலாரை அவரதுவடியார்
வழிப்பட்டு மகிழ்வதும் இந்த தைப்பூசமே!

தாரகசூரனை வதைத்தவிழாவே பழனியின் தைப்பூசவிழா;
தைப்பூச விரதமிருந்து தமிழ்க்கடவுளைத் துதித்து
தமிழர்கள் பற்பலகாவடி எடுத்திந்த தைப்பூசநாளை
தரணியெங்கும் ஆடிப்பாடி கொண்டாடுவர் மகிழ்ந்தே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# மரபுக்கவிதை

## பூக்கள் விடும் தூது
### (நிலைமண்டில ஆசிரியப்பா)

ஞாயிற் றொளியில் ஞால மெல்லாம்
மாய விருளும் மறையும் பொழுதில்
கேதகை நறுவீ கேள்வன் அளிக்க
கோதை யானும் கூந்தலில் சூடவே!
ஓராங் குலவும் ஓருயிர் தும்பியே!
தீராக் காதலைத் தீரனுக் குரையேன்!

கேதகை - தாழம்பூ ; நறுவீ- மலர்
கேள்வன் - காதலன் ;ஓராங்கு - ஒன்றாக



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# நினைவுகள்

மரக்கிளையில் வாழும் பறவைக்கு
இரவில் இருட்டிடும் வானம் தெரியாத வேளையில்

சற்றுநேரத்தில் விழுந்திடும் துளிகளை
இடிச்சத்தமும் மின்னலோடு வீசிய காற்றும்
அச்சமூட்டிட

வீசும் காற்றில் கிளைகளும் முறிந்து விழுந்திட
கட்டியகூடும் சிதைந்திடுமோவென
பதறிய நொடியில்

விழுந்த துளிகளில் நனையும் பறவை



இறகுகள் முளைத்திடாமலிருக்கும்
குஞ்சுகளை காப்பதே முக்கியமென
விடும்மூச்சு காற்றின் வெதுவெதுப்பில்
குஞ்சுகளை அணைத்து

குடையென கொட்டும் மழையில்
நனையும் சிறகுகினை விரித்து
அசைந்திடும் கிளையில் சிலையெனவிருக்கும்
தாய்ப்பறவையை காணும்போது

முன்னொரு நாளில்
அம்மாவும் சேலைக்குள் மறைத்தது -என்
மனதினை நனைத்தது.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

அகர முதல இலக்கிய பேரவை

# கூடா ஒழுக்கம்

(அதிகாரம் : 28)




வஞ்சமனத்தான் கொண்ட
பொய்யொழுக்கம் கண்டு.
உடம்பிலிருக்கும் ஐம்பூதங்களும்
எள்ளி நகையாடும்.

குற்றமென்றறிந்தே நெஞ்சமதை
ஏற்றுக்கொண்டால் அவன்.
வானுயர்ந்த தவக்கோலம்
பூண்டிடினும் பயனல்லவே.

மனவலிமை இல்லாதோனின்
வலிய தவத்தோற்றம்.
புலித்தோலை பசுவானது
போர்த்து மேய்ந்தார்போன்றது.

தவக்கோலத்தில் மறைந்து
தீச்செயல் புரிதலென்பது.
கொலைவேடன் வலைவீசி
பறவைகொய்தல் போன்றது.

பற்றுதுறந்ததாய் பாசாங்கிட்டு
பொய்யொழுக்கத்தில் வாழ்பவனுக்கு.
என்செய்தோமென வருந்தும்படி
துன்பங்கள் நேரிடும்.

அகத்தில் பற்றுதுறவாமல்
புறத்தில் துறந்தார்போல்.
வெளிவேடம் இடுவோரைவிட
இரக்கமற்றோர் வேறெவருமில்லை.

புறத்தில் குன்னிமுத்தாய்
செம்மை காட்டினும்.
அகத்தில் அதன்மூக்காய்
கருமை கொண்டோருமுண்டு.

மனம் மாசடைந்திருக்க
தவமாண்பு பெற்றவர்போல்.
வெளிவேட வஞ்சனையோர்
பலருளர் இவ்வுலகில்.

நேரம்பு கொல்லுதலும்
யாழ்கம்பி இன்னிசைத்தலும்.
மக்களின் பண்புகளை
இவைபோலவே அறியலாம்.

தீச்செயலைத் தவிர்த்து
நல்லொழுக்கத்தில் வாழ்ந்தால்.
மொட்டையடித்து சடைவளர்த்தலெனும்
உலகப்போக்கு தேவையல்லவே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# மனமென்னும் குப்பைத்தொட்டி

மனம் என்பது ஒரு குப்பைத் தொட்டிதான்
ஆம் அங்கே மக்கும் குப்பை மக்கா குப்பை
என்றெல்லாம் பிரித்து போட முடியாது
தீமையும் சரி நன்மையும் சரி
எல்லாவற்றையும் ஒன்றாகத்தான்
போட வேண்டியதாக இருக்கிறது அதற்குள்.

நன்மையை மட்டும் உள்ளே போட்டுவிட்டு
தீமையை வெளியே கொட்டி விடு
இல்லையேல் தீமைகளை உள்ளே போட்டு விட்டு
நன்மையை வெளியே கொட்டி விடு.

இரண்டையும் மனம் என்னும் குப்பை தொட்டியில் போட்டு
அதன் மணத்தை துர்நாற்றம் வீச வைத்து விடாதே.

மனதை துர்நாற்றம் வீசாமல் வைத்துக்கொள்.



கவிஞர் ஆரூர்.சிவ.மணிவேல்

# சாத்தியமாகுமா...?

எதுவும் புலப்படாத
பேரிருட்டில்
இலக்கின்றி எதற்காக
அம்புகளை
வீணாய் எய்கிறீர்கள்.



இருட்டின் குருதி
வெளிச்சமாய்ப் பீரிடுமென
நிர்மாணித்து எய்திருந்தால்
அது
முற்றிலும் பிழையாகி விடாதா?

உங்களை
இனம் கண்டுகொண்ட
பின்னரே
நிறைகுடமாய்
வெளிச்சத்தைக் கொண்டுவர
கிழக்கில் காத்திருக்கிறான்
ஆதவன்.

சுதிமாறாமல் துள்ளிவரும்
அலைகளின் வழியே
ஆழியைத் துறக்க முற்பட்டு
போராட்டக் குரல் கொடுக்கின்றன
நதிகள்.

அது
சாத்தியமாகுமா?
நீங்கள் செய்கின்ற
செயலும் காரியமும்
அதுபோலத்தான்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உண்மை காதல்!

சில நாள் கனவில்
சில நாள் நினைவில்
உனக்காய் என்றும்
நான் காத்திருப்பேன்

துடிக்கும் இதயம்
பார்க்கும் விம்பம்
எதிலும் முழுதாய்
உன்னை கண்டேன்

தூரம் மிகைத்தும்
பிரிவுகள் பிறந்தும்
வலிகள் தாண்டி
உனக்காய் பூத்திருப்பேன்

உலகம் முழுதும்
எதிர்த்து நின்றாலும்
உனக்காய் நானோ
உயிர் துறப்பேன்



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# சாக்குப்பை



சாக்கில் திணித்த பொருட்களாய்
மனவோட்டங்கள்.
நாக்கில் நரம்பில்லாமல் பேசும்
உன்மத்தர்கள்
தன் குறையைப் பாராது பிறர்
குறையைக் காண்போர்
தன் வேலையைப் பிறர்மேல்
திணித்திடுவோர்
நேரத்தை வீணாக்கி வெற்றுக்கதை பேசுவோர்
வீட்டில் சுத்தம் பேணி தெருவில் குப்பை எறிவோர்
போகுமிடமெங்கும் எச்சிலைத் துப்பியே நடப்போர்
சாலையோரத்தைக் கழிப்பிடமாக்கி
ரசிப்போர்கள்
வீட்டில் மனைவி இருக்க
பிறரை நாசமாக்கும் கயவர்கள்.
நம்பிய பெண்களை ஆசை காட்டி
மோசம் செய்வோர்
பிறர் முன்னேற்றம் காண சகிக்காத
சோம்பேறிகள்
வறுமையால் பணிக்கு வருவோரை அடிமையாக்குவோர்
நண்பனின் புறமுதுகில் குத்தும்
நம்பிக்கைத் துரோகிகள்
கவலையை மறக்க மதுவினைத் தேடுவோர்
தெருவில் காய் விற்போரிடம்
பேரம் பேசுவோர்
இவரெல்லாம் சாக்குப்பை கழிவுகளை
மனதினுள் திணித்தோரே
இவர்கள் திருந்திட நாடு நலம் பெறும்.



கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# முல்லைப் பாட்டு


பத்துப் பாட்டில் ஒன்றே முல்லைப் பாட்டு
இந்நூல் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டதே
கவி நயத்தோடு எழுதினாரே நப்பூதனார்
கார்காலம் தொடங்கும்
முன் தலைவியிடம்
தலைவன் வருவான் என்றானே
கார்காலமும் முடிந்தது
போருக்கு சென்ற தலைவன் வரவில்லை
நிலம் காலம் பொழுது
இயற்கையின் அடிப்படையில் எழும்
மன உணர்வாலே சித்தரிக்கப்பட்டதே
தலைவனை காணாமல் தலைவி வருந்தினாளே
பிரிவு துயரம் தாங்காமல் உடல் மெலிந்ததே
தோழி ஆறுதல் கூறிய வார்த்தைகள்
அவளது ஏக்கத்தை குறைக்கவில்லையே
போரும் முடிந்து தலைவன் வர
தலைவி ஆரத் தழுவி இன்புற்றாளே
யாழிசை கேட்டு வண்டுகள் இசைப்பாட
முல்லை பூவும் சிரித்து சென்றதே
முல்லைப் பூவோடு நெல்லையும் தூவி
தெய்வத்தை வழிப்பட்டு
நற்சொல் கேட்டாரே
பகைவனை வென்று நிலத்தை கவர்ந்து
வெற்றிக் கொடியை
உயர்த்தி சங்கு முழங்க
வந்தானே தலைவன்
முல்லைக் காட்டில் அரசனது தேர்க்குதிரை
தேரோட்டி விரைவாக ஓட்டி வந்தானே
அந்த ஓசையைக் கேட்டு
தலைவியின் காதுகள்
குளிர்ச்சியால் மகிழ்ந்ததே
கலைநயத்தோடு கவிநயமும் சேர்ந்து
எழுதப்பட்ட நூலே முல்லைப்பாட்டு





கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# முதல் மயக்கம்



உவகை உள்ளூர
அகவை கள்ளூர
இமைகள் சிறகாய் பறக்க
இதயம் துடிப்பதை மறக்க
உன் நெற்றி பொட்டில்
ஒட்டிக்கொண்ட நான்
மூக்கு முகடு தாண்டி
குதிக்க முடிவு செய்ய
மூக்குத்தியின் நுனி
விளிம்பில் ஊசலாடி
உறைந்து போக
உதட்டோர மச்சம்
உயிரை பருக
இதழ் விரிசலில்
விழுந்து நொறுங்கியவனை
உன் பேனா முனையில்
கவிதையாக்கி
நகக்கண்களில் நிறைத்துக்
கொண்டாயே!

காரைக் கவிஞர் எழிலி

# வறுமை ஒழியட்டும்

வறுமை நீங்கிட
உழைப்பில் உயர்ந்தே
வளமான வாழ்வு
வாழ்ந்திட வேண்டுமே.

தனியொரு மனிதனுக்கு
தன்னிறைவு வளரந்திட.
தவிர்த்திடலாமே வீண்பேச்சு
தருணத்தின் அருமையோடே

சிந்தையில் உயர்வு
சிகரங்களைத் தொட்டிடட்டுமே.
வெற்றிகளின் வாழ்க்கையில்
வெறுமைகள் ஒழியட்டுமே



கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# கவி ஒன்று பாடு

பதினாறு வரியில
கவி ஒன்று பாடு

பதினாறு வரி கவிதை ஒன்னு பாடு
பதினாறு வயது கன்னி போல
மதியை போல் உன் கவியும் உயர்ந்ததே
அந்த மதிபோல உயர்ந்தே நிற்குமே



பத்து பக்கம் கவிபாடி என்ன சொன்னே
பாத்து கேட்ட காதுக்குள்ளே அதுபோனதா
சத்தம் போட்டு படிச்சது எல்லாம்
வெத்து வேட்டுஆனது எல்லாரின் காதுக்குள்ளே

சொல்ல வந்த கருத்து  கூட நீ எப்பவும்
சொல்லும்போது அத சுருக்கிடணும்
அட அப்பத்தானே அது நல்லா கேட்கும்
நமக்கும் உடன் அப்போதே கைத்தட்டி மகிழும்
சத்தம் அங்கு கேட்கும்

மனமும் குளிரானும் கேட்டவர் மனமும் மகிழணும்
தினம் நீ பாடும் கவிதை எல்லாம் இதுபோல இருக்கணும்
அடுத்துவரும் கவிகூட மகிழ்ந்து விடுவான்
ஓடுகின்ற நேரம் கூட உன்னை வாழ்த்தும்

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# என் இனிய கனவுகளே

அழகழகாய் அணி வகுக்கும் கனாக்கள்
ஆயிரமாயிரம் எண்ணங்கள் சிந்தையில்.
உண்மையாய் உறவாடிய உறவுகள் ஏராளமாய் இங்கே
பசித்தவனைத் தேடித்தேடி பசியாற்றும் மக்கள் இங்கே ஏராளமாய்.
இயந்திரத்தனமான வாழ்வை ஓரம் கட்டிவிட்டு
இயற்கையோடு இணைந்து வாழும் மனிதர்கள்.
குயில்களின் இன்னிசையில் எண்ணற்ற மரங்கள்
நடனமாடும் காட்சிகள் கண்முன்னே.
ஆறுகளிலும் குளங்களிலும் கரைபுரண்டோடும்
காட்டிற்று வெள்ளத்தில் ஏற்படும் சுழலில்
சிக்கிவிடுவேனோ என்ற ஐயம் கொண்டேன்.
பச்சைப் பசேல் என்ற வயல் வரப்புகளின் ஊடே நடந்து
காலை வைத்தாலே காலைத்தீண்டும்
அளவிற்கு நீர் நிறைந்த கிணற்றில் குதித்தேன்.
விழுந்ததோ தரையில்!
ஆம்!
எல்லாம் கனவுகளாக.
எழுந்து பார்த்தால்
பொய்த்து போன உறவுகள்
இயந்திர தனமான வாழ்க்கை ஓட்டம்
பசித்தவனை பார்வையால் கூட தீண்டாத மக்கள்
மரங்கள் எங்கேயோ கதவுகளாக
குயில்களோ வரைபடங்களாக
வறண்டு போன வயல்வெளிகள்
புற்கள் நிறைந்த கிணறுகள்
ஆறுகளும் குளங்களும் மேடுபள்ளமாக.
ஏரி எங்கே என்று பார்த்தால்
ஏரியாகளாக இருக்கிறது.
என் கனவுகள் இனியவையாக
இருந்தது கனவுகளில் மட்டுமே.
எல்லாம் பொய்த்து போனதே.
ஏக்கத்துடன் இயற்கை மட்டும் அல்ல
கனவுகள் இனியாவது நிறைவேறுமா என்று?



கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# நிறம் மாறாத கவிதைகள்



விலகிச்செல்கின்ற
கணத்திலிருந்து
மிகவும்
நெருங்கி விடுகிறாய்
இதயத்தில்
நினைவுகளாக
மனதிலே
உணர்வுகளாக

அதன் பின்னரான
பொழுதுகளில்
நீ வேறு
நான் வேறு
என்பதே
இங்கில்லை

நினைவுத்தூரிகையால்
காலவரையறையின்றி
நேசவர்ணம்
குழைத்துக் குழைத்து
நெஞ்சமெல்லாம்
நிறம் மாறா
கவிதைகளைத்
தீட்டிக்கொண்டே
இருப்பேன்!

இதயவறைகள்
கவிதைகளால்
நிறைகின்றன
என்
கணங்களை
உயிர்ப்பிக்கின்றன!

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# செஸ்

கருப்பும் வெளுப்பும்
கலந்ததுதான் வாழ்க்கை!
மனம் போன போக்கில் வாழாமல்
நியதிக்குள் கட்டுப்பட்டு
வாழ வேண்டும் என்ற தத்துவம்
கட்டத்துக்குள் இருக்குது!
ராஜாவை குறிவைத்து
முன்னே வரும் சிப்பாய்கள்
நேரே வரும் யானை
குதித்து வரும் குதிரை
இடம் விட்டு இடம் மாறினாலும்
ராஜாவுக்கு ஆபத்து!
ராஜாவைக் காப்பாற்ற வரும் ராணி!
ராணி அவள் சாய்ந்து விட்டால்
ராஜாவின் ஆட்டம் முடிந்து விடும்!
தலைமை தாங்கும் பண்பு கொண்ட
பெண்ணொருத்தி இல்லை எனில்
ஆண் மகனுக்கு வாழ்வு இல்லை!
மதி கொண்டு காய் நகர்த்த
வெட்டுப்படாமல் தப்பிக்கலாம்!
விதி ஆடும் ஆட்டத்தை
வென்றிடலாம்!





கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# ஹைக்கூ




கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# நீளா பயணம்

காலம் பல கடந்தாலும்
அழியாமல் கடக்கிறது
அவள் ஞாபகங்கள்.
ஏதோ ஒரு மூலையில்
முடிவில்லாமல் நீள்கிறது
அவள் மெல்லிசை கீதங்கள்.
இருப்பினும் காத்திருப்பேன்
பல திங்கள் பூத்திருப்பேன்
காலம் கனியும் என்ற அவாவில்.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# வனத்தாய்க்கு

மரத்தை வரைய
தூரிகை தூக்குகையில்
வண்ணம் முழுக்க
கனிகளாகின்றன.
பறவையைத் தீட்ட
காகிதம் கிழிக்கையில்
இறக்கையாய் மாறி
பறக்க எத்தனிக்கிறது.
வனத்தின் பசுமையை
வடிக்கும் கரத்தில்
குவியலாய் விழுகின்றன
விலங்குகளின் எச்சங்கள்.
இயற்கைச் சிதைவை
எழுதும் பேனாவில்
கசிகிறது உலகின் கண்ணீர்.
எதுவும் செய்யாமல்
வேடிக்கையில் நிற்கிறேன்.
கவிதையின் வழியே
காடு பிறக்கிறது.

கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# உனக்கு நீயே ஏணி

சுற்றத்தார்கள் பலர் உன்னைச் சூழ்ந்திருந்தாலும்
உற்றத்தவர்கள் சிலர் உன்னை உத்வேகப்படுத்தினாலும்
உன்னால் முடியும் என்று முன்னேறு
அதுவே உன் வெற்றியின் முதற்படி

விமர்சனங்கள் பல உன்னை பதம்பார்க்கும்
இகழ்ச்சிகள் சில உன்னை வந்துசேரும்
மனம் உடைந்து மடிந்து விடாதே
தன்னம்பிக்கையோடு நெஞ்சை நிமிர்த்தி கொள்

எண்ணங்கள் வெவ்வேறு திசையில் மாறலாம்
குறிக்கோள் திசை மாறியும் செல்லலாம்
ஆனால், உத்வேகத்தை கைவிட்டு விடாதே
உன் வெற்றியும் இலக்கும் தொலைவிலில்லை

சோதனைகள் நிறைந்து சோர்ந்து விட்டாலும்
வலிகள் சொறிந்து வலிமையிழக்க செய்தாலும்
என்றும் இலட்சியத்திலிருந்து பின்வாங்கி கொள்ளாதே
நீயே உனக்கு ஏணி படியாகும்

கவிஞர் நுஸ்ஹா அஸீம்,ஓட்டமாவடி(இலங்கை)

# அம்மா

ஊரை உலகத்தை
உன்னாலதான் நான் அறிஞ்சன்
ஆளை அடையாளத்தை
நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சன்
பாசம் பசியெல்லாம்
உங்கிட்டதான் நான் சேத்துவெச்சன்
வேதனையும் வலியும் மறைக்க
உங்கிட்டதான் நான் கத்துக்கிட்டன்
தேங்காய்ப் பாலில்
மூழ்கிக்குளித்த சோற்றில் - நீ
புளி சேர்த்து பிசைந்து தந்தாய்
ஆரோக்கியமாய் இன்று வரை இருக்கிறேன் - ஏன்?
உன் கைகளின் ஆயுள் ரேகை
சோற்றில் சேர்ந்ததாலோ?
விளையாடி வந்தேன்
களைப்போடு வந்தேன்
உன் விரல் கொண்டு
என் முடி கோதிவிட்டாய்
என் களைப்பு
காற்றில் கரைந்து போனது
இன்றுவரை நரை கண்டதில்லை
என் தலைமுடி - ஏன்?
என் நரையையும் முதுமையையும்
உன் கைகளால் நீ
உறிஞ்சிக் கொண்டதாலோ?
வானம் உன் முகமாய்
மேகம் உன் கூந்தலாய்
அதிலுள்ள நட்சத்திரங்கள்
உன் விழிகளாய்
நான் கண்ட மழை
உன் கண்ணீர்தானே - தாயே
உன் மார்புப் பாலும்
மழையென நினைத்தேன்



என் வயிற்றில்
அது வந்து வீழ்ந்த போது
உன் கண்களில்
கண்ணீரை காண்பதற்கு முன்னால்

கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# என் எழுதுகோல்

அரிதாரம் இல்லா
குழந்தை முகமாகி
ஜாலங்கள் அற்ற
வார்த்தைகள் கோர்த்து
இயல்பாய் அழகியல்
சுமக்கும் என் எழுதுகோல்



அவ்வப்போது
உலக கவிதை
வரையறைக்குள்
கண்மூடி தொலைந்து
புதிர்கள் உடைத்து
புத்தாக்கம் பெறுகிறது

நின்ற சீரின் ஈற்றசையை
வரும் சீரின் முதலசையுடன்
கட்டாமலேயே
நேரிசை வெண்பாவிற்கு
தனிச்சொல் தேடி
படிமம் தாவி
இறுதியில்
புதுக்கவி புனைகிறது
மாமுன் நிரையில்

தொடரும் எழுதுகோல்
இறகுகள் சேர்க்கிறது
காட்சி அற்ற
உணர்வுகள் உள்ளடக்கிய
கவிதைகள் சுவாசிக்கும்
ஆதி குகைகளின்
பயணத்திற்கு

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# பாப்பா பாட்டு

எத்துப் பல்லு பாப்பா - தலைய
எட்டிக்கிட்டுப் பார்ப்பா
முட்டக் கண்ணு பாப்பா - கதைய
முந்திக்கிட்டுப் கேப்பா
ரெட்டக் குடும்பி பாப்பா - கைய
ரெக்கை யாக்கிப் பறப்பா
பச்ச மண்ணு பாப்பா - சிரிப்புப்
பசியை எனக்குத் தாப்பா



ஆறு வயசுப் பாப்பா - ஆறு
அறிவு நிறைந்த பாப்பா
கூற வந்த கதையை - நிறுத்திக்
கூறு போட்டுக் கேப்பா
உருண்டக் கண்ணு பாப்பா - உலகம்
உருண்டை யானு கேப்பா
ஒரண்டை கொஞ்சம் இழுப்பா - சிரிப்பு
ஒத்தடத்தைக் கொடுப்பா

சாதி மல்லி பூவில் - இருக்கும்
சாதிப் பெயரை வெறுப்பா
பாதிப் பெயரை வெட்டி - மீதி
பூவை மட்டும் ரசிப்பா
சாமி கொடுத்த உயிரை - புது
சாவி போட்டுத் திறப்பா
பூமி குலுங்கச் சிரிக்கும் - அந்தப்
புன்னகையை விதைப்பா.

சில்லு கருப்பட்டி பாப்பா - கட்டிச்
சீனிச் சக்கரையா இனிப்பா
பல்லக் காட்டிட்டே இருப்பா - வெல்லப்
பாகு பதம் கொண்ட பாப்பா
உள்ளியை உரிச்சுப் போட்டு - அதில்
உண்மைத் தத்தவத்த மறைப்பா
வெள்ளாவி மனசத் திறந்து - தினம்
வெள்ளந்திப் பூவா சிரிப்பா

கவிஞர் மதுரகவி, மதுரை

# இயற்கை விருந்து

இயற்கை அன்னை சமைக்கும் விருந்து
செயற்கை இல்லாச் செம்மை மருந்து

அறுசுவையும் கலந்த அற்புத ரசிப்பு
பெறுபவர் எமக்குப் பற்பல புசிப்பு

இயற்கை அதனுடன் இயைந்த செயற்பாடு
இயக்கும் புவியை நன்றே சிறப்போடு

அன்னை விருந்தும் இனிப்பாய்ச் சுவைக்கும்
அமுதம் போலே உயிரும் காக்கும்



விருந்தை விசமாய் மாற்றி மாந்தர்
கருமம் ஆற்றி கேடே தருவர்

கசக்கும் இயற்கை விருந்து அனர்த்தமாய்
காயப்படுமே அன்னை மனதும் வருத்தமாய்

விடுவோம் இயற்கை அழிக்கும் செயலை
தடுப்போம் அன்னை இயற்கை அனர்த்தங்களை

இயற்கையோடு இயைந்தே வாழ்வோம் ஒன்றாய்
இயற்கை விருந்தை சுவைப்போம் நன்றாய்


கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# தமிழர் பாரம்பரியம்

அந்நியன் ஏக கலைவித்தை தெரிந்தும்
நம் கலை முத்தை தேடி தான் நிற்கின்றான்
நிதம் நம் பருக மறந்த பவளச்செம்மலை பவித்திரத்தை
சொத்தாக்க சோதி நெறியாளனாகிறான்.

நித்திரையிருக்கும்
உம் அறிவுகண்ணை வேட்கை கொண்டு திறந்திடு.
உனக்கு வேண்டிய அனைத்தும்
தமிழ்தாயிடம் அளப்பெரிதாய் இருக்கின்றன
ஆய்வு தொடங்கி
அறிவு வரை வியாபித்து

உன் முதற் செயற்பாட்டை முற்றுகையிட்டு முடக்கலாம் - ஆனால்
சிந்தனையின் முதற்தேடலை எண்ணத்தை ஒருபோதும் முடியாது.
அதுவே உன்னை எதற்கும் உந்தி நிற்கும் உன் பெயர் தலைமுறை
காத்து சொல்லும்.



நீ முழுமனிதனா ? இல்லையேல்
அரை மனிதனா ?
சற்று யோசி.
ஆடையில்லாதவன்
அரைமனிதனென்றால்
நடப்பறிவு இல்லாதவன்
உலகதிசை அறியாதவன்?
உணர்விலாவது ஆதி தமிழாக்கத்தை நாடி,
அதன் சுவாச காற்றை சுவாசிக்க துடிப்பானாயின் ஒவ்வொரு
தனிமனித வரலாறும்
வரலாற்று பக்கங்களாகும்.

கவிஞர் வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்

# முரண்



வார இதழுக்கு
கூட்டுக்குடும்பம்
சிறப்பை பற்றி
கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறாள்

தனிக்குடித்தனம்
சென்ற சாந்தி

கவிஞர் விக்னேஷ்,வேலூர்

# வெட்கம்



உன்
விழிகளுக்குள்
வர துடிக்கிறேன்
சட்டென்று
மூடிக்கொள்கிறது
உன் இமைகள்
வெட்கத்தினால்

கவிஞர் சரவணன்,சங்கரன்கோவில்

# தனிமை என்னும் வரம்

எதிர் நிற்பவரின்
புரிதலற்ற வசைகளுக்குள்
பதுங்கிக் கொள்ளும்
ஆழ் மனத்தை
மீட்டெடுக்கவும்
தேவைப்படுகிறது
இங்கே சில தனிமை
கணங்கள்;
எத்தனை நபர்கள்
நிரம்பிய
கூட்டங்களுக்குள்ளும்
நமக்கென்ற
அடையாளத்தைத்
தனித்துக் காட்டுவது
நம்மையே நாம்
ரசித்துக் கொள்ளும்
சில நொடிப் பொழுதிலான
தனிமை வரங்கள்;
பிடித்த இசையில்
லயித்திடவும்
மெய் மறந்து
உடன் இசைத்திடவும்
வேண்டும் இங்கே
தனிமை!
தனிமையிலும்
கூட்டத்திலும்
காத்து ரட்சிக்கவென
சரவணபவனார்
என்றும் உடன் இருக்க
தனிமையைக் கண்டு
ஏன் பயங்கொள்ள வேண்டும்?



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# விழித்தெழு சமூகமே

பொருட்களுக்கு ஆசைப்பட்டு வாக்களிக்கும் சமூகமே
பொறுத்திருந்து சிந்தித்துப் பார் அதிகாரிகளையே
பொருட்கள் அழிந்திடும் ஆட்சி அழிந்திடுமோ
பொங்கி எழுந்து ஏமாற்றத்திலிருந்து விழித்தெழுவீரோ

மதத்தை வைத்து ஆட்சியின் ஆட்டமே
மயங்கிப் போகிறார்கள் மக்கள் தானே
மதி கெட்டு அடிதடி பிளவிங்கே
மன்னனாய் ஆள்கிறான் சண்டையிட வைத்தவனே

ஏழை பெண்குழந்தைகளை ஏமாற்றும் தலைவர்களே
ஏழ்மையை வைத்து கற்பை சூரையாடுவதோ
ஏழைக்கும் மானமுண்டு என்பதை அறிவாயோ
ஏமாற்றத்தில் வீழ்ந்திடாது விழித்தெழு சமூகமே

பணத்தை கண்டு மயங்கும் அதிகாரிகளே
பலத்தை இழந்து கோழை ஆகுவதோ
பதுங்கிய கள்வனுக்கு தண்டனை வழங்கியே
பணம் எடுப்பதிலிருந்து விழித்தெழு சமூகமே

இளைய சமூகமே நாட்டை காத்திடவே
இணையத்தில் மூழ்கி படிப்பை இழக்காதே
இடர்களை உடைத்து நாட்டை காத்திடவே
இயற்கை வளங்களை காத்திட விழித்தெழு



பெண்களை அடக்கி முடக்கிட வைக்கிறார்களே
பெண்களின் கற்பை காத்திட மறுக்கிறார்களே
பெண்களை முன்னேற்றி அச்சமின்றி வாழவைக்கவே
பெண்களை காத்திட விழித்தெழு சமூகமே

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# ஹைக்கூ

1)
வரப்போடு தென்னைமரம்
தனித்தனியாக இருக்கின்றன
சொந்தங்கள்

2)
நீர் நிரம்பிய குளம்
மாலையில் அதிகரித்து வருகிறது
சாலையில் பூச்சிகள்



3)
காற்றில் மெதுவாக
அசைகிறது
மாட்டின் தாடை

4)
வானமும் பூமியும்
ஒருசேர நிற்கிறது
அடர்ந்து பெய்யும் பனி

5)
வயலில் நாற்று
கூர்மையாக இருக்கிறது
கொக்கின் பார்வை

6)
வானில் வட்டமிடும்
விட்டில் பூச்சி
பிரகாசமாக காட்சியளிக்கிறது முழுநிலவு

கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# மௌனம்



உன் தாய்
உன்னை ஈன்ற போது
பெற்ற வலிகளைவிட
ஆயிரம் மடங்கு
வலிகளை தருகிறது
உன் மௌனம்.

கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# இலட்சியத்தின் லட்சணம்

முயலாமையால் முழுமையாக பல லட்சியங்கள்

லட்சியவாதிகளின் சாதனைகளை
சரியான நேரத்தில் சாட்டுவதே
சமூக ஊடகங்களின் சராசரி இலட்சியம்

பெற்றோரின் பெரிய ஆசை இலட்சியமே.
பிள்ளைகள் பெரும்பேறு பெறுவதே

காளையர்களுக்கு காதலிக்க வைப்பதே லட்சியம்
காதலித்த பிறகு காதல் மணமே லட்சியம்
மணவாழ்க்கையில் மறத்து போகும்
மனதில் காதலே லட்சியம்.



அமைப்பான ஆச்சர்யமான
இயற்கையின் ஈகையை
உணரவைப்பதே ஊரறியாத
எளிமையான லட்சியம்.

அவனியில் அடிமனதின் லட்சியத்தை
அலட்சியம் செய்யா ஒரே ஒருவர் ஆண்டவன்

ஆளும் போதே இலட்சம்கோடி
லட்சியமாக வாழ்க்கை

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# கிருபானந்த வாரியார் சுவாமிகள்

சாதனை என்பது சிந்தைனையிலும் செயல்
பாட்டிலும் உள்ளது. அப்படி சிந்தனை
செய்து, சாதனை படைத்தவர்களில், ஒரு வைரக்கல்
வாரியார் சுவாமிகள் ஆவார்!
எண்ணற்ற நூல்கள் படைத்து, அதன் மூலம் கருத்தை
ஆன்மீக வாயிலாகவும், சமூகத்தின் வாயிலாகவும்
பரப்பி எண்ணற்ற தமிழ் மக்களின் நீங்கா இடம்
பெற்ற நம் சுவாமிகளின் வரலாறு ஒரு சகாப்தமே!
பல ஊர்கள், பல நாடுகள் என்று கதா காலச்சேபம்
செய்தும், சிரிக்கவும், ஆன்மீக விஷயங்களில் சிந்திக்கவும்
வைத்த மகான். "இறைவன் ஒளிமயம் ஆனவர்" என்கிறார்.
சுவாமிகள், கோயிலுக்குச் சென்றும் வழிப்பட சொல்கிறார்.
ஔவையார் அருளிய "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
நம் முன்னோர்கள் தீர்க்கதரிசிகள், மார்க்கதரிசிகள்
என்று சொல்லும் சுவாமிகள், சிவநெறி ஓங்குக,
அன்பு தழைக்க, அருள் நீடுக என்கிறார்.
ஆலயம் செல்லுங்கால், ஆண்டவனை, மனம் மகிழ
பாடச் சொல்கிறார். இசைக்கு மயங்காதவர்
எவரேனும் உளரோ! நம் வள்ளுவ பெருந்தகையின்
திருக்குறளில்,"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
இதன் அடிப்படையில் "நன்றி மறவேல்"
என்ற சிறு கதையையும் அருளி உள்ளார்.




கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# நோய்மை கொண்டேன்

உன் வார்த்தைகளால் வெந்து
தணியாத வடுவாய்
நோய்மை கொண்டேன்.

மீளவும் முடியா
உனை விலகவும் முடியா
ஔடதம் தேடியே வாழ்நாள்
கழியுமோ.

கசிந்த குருதியோ விழி வழியே
பாதை செய்ய.
எறும்பு குடைந்த பாறையாய் ஆனதோ.




அகம் மலர்ந்தால் தானே
முகம் மலர.
அகம் அலரிட
வதனம் மட்டும் நகைக்குமோ.

சின்னதாய் தலை பதியடா.
என் கன்னங்களில்.
மருந்தென ஏதும் தேவையே இல்லை.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# கல்லூரிக்கு ஓர் மடல்

ஏழாண்டுக் கல்விக்கூடம்,
ஏழேழு ஆண்டுக்கும் மறக்காத நினைவுகளைத் தந்த
கலைக்கூடம் நீயல்லவா



உலகை வெல்ல கல்வியையும்,
உறவை வெல்ல நற்குணத்தையும்
கற்றுத்தந்த தாயல்வா நீ.

பாசத்துக்கும் பஞ்சமில்லை,
பாதுகாப்பிற்கும் பஞ்சமில்லை உன்னில்.

அனுபவங்களைத் தந்த ஆழ்கடல் நீ
நல் ஆசான்களை தந்த கலைக்கூடம் நீ
உயிர் நட்புகளைத் தந்த உன்னத உறவு நீ



உலகை அறிந்திட நூலகம் போதும்
என்னை உலகம் அறிந்திட
வரிகளொன்றே போதுமென்று
உணர்த்தியதும் நீயல்லவா.

உலகத்தில் ஓர் சொர்க்கமென்றால்
அது என் கல்லூரியே.

நீ ஈன்ற முத்துக்கள் நாங்கள்
உன்னை மறப்பதென்பது சாத்தியமாகுமோ
கல்லூரித் தாயே.

நட்சத்திரமில்லாத வானமுமில்லை
உன் நினைவுகளில்லாத நிமிடங்களுமில்லை.

என் நாட்குறிப்புக்களிலெல்லாம்
உனக்கான வரிகள்தான் ஏராளம்

உனக்கான மடலில் முத்தாய்ப்பிட பேனாவும் மறுக்கிறது
வரிகளோடு வற்றிவிடாது உன் மீதான
என் அலாதிப்பிரியம் கல்லூரித் தாயே.

கவிஞர் சனுபா தாஹிர்,இலங்கை

# எனக்கும் அடைக்கலம் தா

ஒற்றைஇலை இல்லாமல்
உதிர்ந்தபின்னும் புள்ளினங்கள்
சுற்றிவந்தே அணைந்திடுதே
சுற்றமாக எண்ணித்தான்
பசுமையினை தொலைத்தபோதும்
பாசத்தால் இணங்கிடுதே
விசும்புகின்ற தாயுள்ளம்
விடியலையும் தேடிடுதே



செல்வங்கள் சேர்ந்திடவே
சென்றபிள்ளை திரும்பவில்லை
எல்லைகளை கடந்ததனால்
இன்னுயிரை மறந்தானோ
புள்ளினத்தின் பற்றுகூட
பூக்கிறதே பட்டபின்னும்
பிள்ளைகளின் பற்றிங்கே
பிரிவைமட்டும் பரிசளிக்கும்

மாண்டிடும்முன் காண்பேனோ
மனசெல்லாம் நிறைந்தவனை
ஆண்டுபல ஆனபின்னும்
அவன்நினைவு கூடியதே
மரமாக இருந்திருந்தால்
மனசதுவும் துடிக்காதோ?
வரமென்றே சாபத்தை
வாங்கிவந்த பெண்நானோ!!

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# பணம்

மனித வாழ்க்கையோடு
பின்னிப் பிணைந்து
எண்ணிலடங்காத துன்ப துயரங்களுக்குக் காரணமாகி
தினமும் அலைக்கழித்து
நிம்மதி இழக்கச் செய்கிறது
பணம் எனும் அருவமான பொருள்

வாழ்க்கையின் ஆதாரமே பணமாம்
உணர்வுகளின் சேதாரமும் பணமே தான்



மனிதன் மதிக்கப்படுவதும்
மண்ணில் போற்றப்படுவதும்
பணத்தின் இருப்பைக் கொண்டே

ஏழை இவனெனத்
தரம் பிரித்துக் காட்டி
மக்கள் மனங்களில்
வேற்றுமையைத் தோற்றுவித்து
உலகத்தையே அடக்கி வைத்திருக்கும்
பொல்லாத அரக்கன்

மனித குணத்தை வேரறுப்பது இவனது குணம்
எங்கும் எதிலும் எப்போதும்
ஆட்சி அதிகாரம் இவனிடமே
நல்லுள்ளங்களையும்
நசுக்கி மகிழும்
வக்கிர புத்திக்குச் சொந்தக்காரன்

அளவோடு நேசிக்காவிடின்
அழிவும் இழிவும்
நிழலாய்த் தொடரும்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# உருத்ர அர்த்தனாதீஸ்வரர்

'ஓம் நமசிவாய' நாமம் உச்சரிக்கும்
தூய்மையெனும்
ஆன்மா உன்னுள் ஊடுருவி
சிவ சிந்தனையில் சிரசும்
சித்தம் பெற.

சீராக நின்று சிவபெருமானை நீர்த்துலக
வாயார அண்ணம் அமுதுன்று
வாய்ப்பெருமை மாறாக சிந்திடும்
சிவலோக சித்தர் உன்னை நாடி.



மூவுலோகம் தேடி நின்று,
பூவலிங்கம் வையகம் பெற
நா விசைப்பாட நமச்சிவாய
என்று சொல்ல தேன்மொழியாய் சுவைத்தார்
இவ்வுலகமும் நலம்பெற
நான் என்றும் துதிப்பேன் உன்னேயே.
ஓம் நமசிவாய!

கவிஞர் கணிதன் மா.சரவணன்,இலங்கை

# முடிவில்லா நிழல்

வாழ்க்கை ஒரு முடிவில்லா நிழல்
சில காலம் மழை வெள்ளம்
சில காலம் வெயில் காய்ந்த மண் சுவடு
முடிவில்லாமல் பயணிக்கும் நாம்
துயரத்தையும் தூரத்தையும் அறியாமல்
கண்ணீர் குமிழிகளுடன் தினம் தினம்
கால் பாதமும் வறட்சியுடன்
புரியாத உறவுகளுடனும் உள்ளங்களுடனும் நாம்
ஏதோ ஒரு மந்தநிலையில் பல பிழைகளுடன்
சக்கரம் போல் சுழன்று
பள்ளம் மேடுகளை கடந்து காயப்பட்ட மனநிலையுடன்
மாறுமா இந்த வாழ்க்கை
என்னும் கோணத்தில் நம்பிக்கை இழக்காமல்
நயத்துடன் சிலர் புறத்துடன் பலர்
வெளிச்சத்தை தேடி தேனீபோல்
உறக்கமில்லா உழைப்பை தன் கரங்கள்
வலி அறியாமல் தனிமையில்
பல விதங்கள் சூழ்நிலை வீழ்த்தினாலும்
பல விதிகளில் என் வலிகள் ஒன்றுதான்
காதல் அன்பு கலங்கிய நெஞ்சம்
ஏமாற்றம் அடைந்த துரோகம் யாரை நம்புவது
ஏன் எதற்காக அறிந்து கொள்ளாமல்
என்னாலும் ஒருநாள் முடியும் விழித்திருக்கிறேன்
விழிகளுடன் அல்ல வலிகளுடன்
முடியும் வரை முயற்சி செய்து கொண்டு
இப்பிரபஞ்சத்தில் பித்தனாக



கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தாப்பூர்

# வலிகள் இல்லாத வாழ்க்கை இல்லை

வலிகள் இல்லாத
வாழ்க்கை
இங்கு யாருக்கும்
இல்லை

வலிகள் சுமந்த
வாழ்க்கைதான்
வண்ணங்கள் கொண்டு
உன்னை
வடிவமைக்கும்

வலிகள் தாங்கிய
வாழ்க்கை
உனக்கு வலிமை தரும்

சோதனைகள் கண்டு
ஒரு நொடியேனும்
நீ சோர்ந்து விடாதே

சோதனைகளுக்குள்
ஒளிந்திருக்கும்
சாதனைகளை நோக்கி
நீ புறப்படு

சாதனைகளால்
உன் வேதனைகள் யாவும்
மறைந்து போகும்



வலிகளால்
நீ வாடிவிட்டால்
வாழ்க்கையே
வலிகளாகிவிடும்

உணர்ந்தே
உன் பாதைகளில்
எதிர்ப்படும்
கற்களையும் முட்களையும்
தாண்டிச்செல்

கோழைத் தனத்தையும்
பயத்தையும்
முதலில் கொன்று விடு

தன்னம்பிக்கையை
வளர்த்துக்கொள்
வாழ்வு வளமாகும்

கவிஞர் ஆய்ஷ்,கம்பளை

# திருநாளைப் போவார் நாயனார்

தில்லை அம்பலாவாணனைக் காண போவது எப்போது? நாளை!
எல்லை இல்லா ஈசனைக் கண்டு தரிசிப்பது எப்போது? நாளை!
தில்லையில் ஆடும் கூத்தனைக் கண்டு களிப்பது எப்போது? நாளை!
எல்லையிலா ஆர்வத்தில் இருப்பவருக்கு அந்த "நாளை" வந்ததா?

தென்னை, மா, பலா, கமுகு, வஞ்சி மரங்கள் சூழ்ந்த வளமான ஊர்
பனை மரத்தில் வடியும் கள்ளின் போதையிலும் மதி மயங்கா மக்கள்
தன்னலம் இல்லாமல் வயல் வெளி வளங்களில் உழைக்கும் மக்கள்
பின்னலாக பிணைந்து பாசமான பள்ளர்கள் வாழும் ஊர் ஆதனூர்

உழவராக நிலங்களில் சிந்தும் வேர்வையில் சிரித்து வாழ்பவர்கள்
விழலினால் மேயப்பட்ட சிறு குடிசைகளில் கூட்டமாக வசிப்பவர்கள்
தழை இரைபோட்டு வளரும் ஆடு மாடுகளை இரையாக உண்பவர்கள்
பிழையேதும் அறியாது சேற்றிலும் சகதியிலும் மகிழ்ந்து வாழ்பவர்கள்

சிவனும் அரியும் ஒன்றா, வேறு வேறா எந்தக் கோயிலும் அறியாதவர்கள்
கள்ளுண்டு பறையடித்து கூத்தாடுபவர் மத்தியில் நீறு பூசிய அடியார் அவர்
உள்ளும் புறமும் திருநீற்று வெண்மையில் ஒளிர்ந்து வாழ்ந்தார் அவர்.
தெள்ளுத் தமிழில் சிவாயநம ஒலிக்க சிவத்தலங்கள் வழிபட்டார் அவர்

அவரே புலையர் கூட்டத்தில் அவதரித்து நாமம் சூடிய நந்தனார் ஆவார்
எவர் கற்றுத்தந்தார் தினம் நீராடி நீறுபூசி சிவனன்றி ஏதும் இல்லை என்று?
இவர் மட்டும் இன்றி பலரையும் சிவத்தலங்களுக்கு அழைத்துச் சென்றார்
உவர் மண்ணில் உழன்றவர்கள் சித்தம் தெளிந்தார்கள் திருத்தொண்டில்

திருக்கோயில் வெளியே நின்று சிவனை வழிபடுவதே வாழ்க்கையானது
ஒருநாள் திருப்புன்கூர் சிவனை வழிபட ஆதனூரிலிருந்து அவ்வூர் வந்தார்
தெருவில் நின்று சிவனை எட்டிப்பார்க்க நடுவில் நந்தி தேவர் மறைத்தார்
அருகில் செல்ல அனுமதி இல்லை மனம் நொந்து கண்ணீர் சிந்தி அழுதார்

சிந்திய கண்ணீர் சிவன் பாதம் பட்டுத் தெறிக்க அருள் புரிய எண்ணினார்
முந்தி நிற்கும் நந்தியைப் பார்த்து,"சற்றே விலகும் பிள்ளாய்" என்றார்
நந்தி நகர்ந்தார், சிவனின் திருவுருவம் கண்டு ஆனந்தக் கூத்தாடினார்
நந்தனார் கோயிலின் எதிரில் இருந்த சிறு பள்ளத்தை வெட்டினார்

வெட்டிய பள்ளம் கோயிலின் திருக்குளம் ஆனது (இன்றும் காணலாம்.)
மட்டில்லா மகிழ்ச்சியில் சிதம்பரம் நடராஜரை வணங்க நினைத்தார்
திட்டமிட்டபடி தில்லைக்கு போக முடியாமல், நாளை போவேன் என்றார்
பட்டி தொட்டி எல்லாம் சொல்லி சொல்லி வந்தார் "நாளை போவேன்"

தில்லையம்பதிக்கு ஒரு நாள் புறப்பட்டு வந்துவிட்டார் நந்தனார்
தில்லைவாழ் அந்தணர்கள் ஊருக்குள் நுழைய தடுத்து விட்டனர்
எல்லையிலே அன்னஆகாரம் இன்றி மன வருத்தத்துடன் உறங்கினார்
தில்லைக்கூத்தன் கனவில் தோன்றி, "அக்னியில் மூழ்கி எழுந்து வா"

அந்தணர்கள் கனவிலும் அஃதே கூற, அக்னி குண்டம் தயாரானது
நந்தனார் சிவனை சிந்தையில் வைத்து அக்னியில் நனைந்தார்
சந்தன மார்பில் பூணூல் ஆட சடா முடியுடன் எழுந்து வந்தார்
துந்துபிகள் முழங்க கனகசபையில் நடனமிடும் சிவனை தொழுதார்.



கவிஞர் ந.திருக்காமு,புதுச்சேரி

# நானும் என் நம்பிக்கையும்!

வசதியின்மையும், வாய்ப்பின்மையும;
என் விலாசங்கள்.
ஆனால்
பொறுமையும், போதிய அறிவும்
என் பொக்கிஷங்கள்.

நேற்று விதை;
இன்று முட்களுள்ள செடி;
நாளை ரோஜாக்களை பூப்பிப்பேன்.
ஆம்
நேற்றுவரை காட்டாறு
இன்றோ நம்பிக்கை கரைகொண்ட ஜீவநதி!

முயற்சி ஊற்றோடு
இப்புவியெங்கும் ஓடி.
பாலைகளையெல்லாம்,
சோலைகளாக்குவேன்.

அன்பைக் கூட்டி, துன்பம் கழித்து
அயர்ச்சியை அழித்து, முயற்சியைப் பெருக்கி,
அறிவை வகுத்து.
பலர்தம் வாழ்க்கை கணக்குகளுக்கு
சூத்திரங்களாவேன்.



ஏமாற்றங்களை ஏற்றங்களாக்கி
தோல்விகளை தோற்கடித்து
என் தரித்திரங்களையெல்லாம்
சரித்திரங்களாக்குவேன்.

ஏனெனில்
நான் வாழப் பிறந்தவனல்லன்.
பிறரை வாழவைக்கப் பிறந்தவனே!

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# பகல் கனவு

கடல் நீரும் நானும்,
காதல் கொள்ளும் நேரம்!
கன்னி அவளை காணோம்!
கனவாய் தூது செல்லும் மேகம்
தூறல் ஒன்று போடும்!
சில்லென்ற வாடை அவள் - மேனி
சிலிர்க்க மெல்ல துயில் கலைந்தாள்!
சூரியனை தரிசிக்க எழுந்தாள் சுந்தரி
சுந்தரியை தரிசிக்க விரைந்தான் சூரியன்!
சுந்தரியின் விழிகளுக்கு
சுட்டெரிக்கும் வலிமை எப்படி வந்தது?
சூரியன் வரம் தந்தானோ சுந்தரி!
மகனே எந்திரி, தாயின் குரல்.

பகல் கனவு



கவிஞர் ர.சூர்யா,கொழும்பு

# இன்னும் ஆறாமல்

வீட்டில் நிம்மதியைத்
தொலைத்தவர்,
வேலைவாய்ப்பைத்
தேடிக்கொண்டிருப்பவர்,
நிழலைத் தேடும்
விற்பனைப் பிரதி,
காப்பீடு பிடிக்கும்
முகவர்,
காற்று வாங்க நினைக்கும்,
காலத்தை ஓட்ட நினைக்கும்,
அரசின் நலத் திட்ட அறிவிப்பு
செய்தித் தாளில் வந்துள்ளதா ?
என
ஏதோ ஒரு காரணத்தினால்
மட்டுமே
இன்னும் தேநீர் கடைகளில்
கூட்டம் இருக்கிறது.



கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக் கவுண்டன் புதூர்

# வயல்

உழுத லன்றி வேறறியான் மருதம்
தொழுதே பழகிய உழவன் - அவன்
அழுத கண் துடைத்தே வாழ்வில்
பழுதில்லை என்குமாம் வயல்




கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# எது காதல்?

காதல் எனும் சொல்லே
காதல் எனும் சொல்லே
சொல்லேன சொல்வதன் காரணம்
வெறும் சொல்லாக மட்டுமே
என் வாழ்வில் சென்றதனால்!

உணர்வு அளித்து அதை
உணர்வற்று அழிக்கும் செயல்!



இங்கு எது காதல்?
காமம் தழுவி கட்டியெழுந்து
மகரந்தம் செய்யும் வண்டாய்
செடிவிட்டு செடி தாண்ட
என்னாயுள் சிறு பூவினதா!

ஆகவே அலறுகிறேன் உறவுகளே
சொல்லில் உணர்வு தேடாதே
இதயத்தில் கசிவதே காதல்
கண்கலால் மூளையை அடைவதல்ல!

கவிஞர் இரா.ஆனந்தன்,திண்டுக்கல்

# உயிரானவள்

நான் சிணுங்கும் போது தாயானாள்
நான் தவறிழைத்தால் ஆசானானாள்

நான் மகிழ்ச்சியடைய கோமாளியானாள்
நான் துன்பப்பட ஆறுதலானாள்

நான் வெற்றி பெற ஆனந்தமானாள்
நான் தோல்வியடைய நம்பிக்கை ஆனாள்

நான் துயரப்பட தூண்டுகோலானாள்
நான் நானாக இருக்க எல்லாமுமான என் உயிர்ப்பானாள்

என் உயிரில் கலந்த உறவானாள்
அவளே நான் என்னும் என்னை மாற்றிய உயிரானவள்



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# கண்களால் பேசிடவா

காதலின் வித்தையை
கண்களால் பேசிடவா
மோதல் இல்லாத
மோகனத்தில் கூடிடவா

உள்ளத்தின் உணர்வுகளை
உடையாது உரமாக்கிடவா
கள்ளமில்லாப் மனதால்
காயங்கள் போக்கிடவா

இதயங்கள் இணைந்து
இன்பமாய் இனித்திடவா
உதயத்தை ஒளியாய்
உண்மையில் ஊட்டிடவா



கரும்பின் சுவையாய்
கனிந்து கதைபேசிடவா
பருவத்தின் தாகத்தை
பாசத்தில் பரிமாறிடவா

அன்பினை என்னில்
கொட்டி ஆசைகள் தீர்த்திட வா
வானும் நிலவுமாய்
ஒன்றாய் வாழ்ந்திடலாம் வா

உயிரே தேடிவா
என்னோடு உறவாடிடவா
பிணைந்த பிரியத்தில்
மறுமுறை பிறப்போம் வா

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# அமைதி கொள் மனமே

உண்மை இங்கே ஊமையானது
உள்ளம் தினமும் காயமானது
உட்பகைச் செயலே நிறைந்து போனது
உதவிடும் கரங்கள் தூரமானது

விழிக்கு முன்னே ஒரு பேச்சு
விழி மறைய மறு பேச்சு
பழிச்சொற்கள் வீசி ஏச்சு
வலிதரும் வாழ்க்கையாச்சு

மெய் யன்பு மேதினியில் இல்லை
பொய் யுரையோ நித்தமும் தொல்லை
நோய் வந்தும் திருந்துவார் இல்லை
வாய்ச் சொல்லோ விசத்தின் எல்லை

ஏனிங்கு உனக்கு ஏமாற்றம் நாளும்
நீயிங்கு பொறுமை கொள்வாய் மேலும்
யாரிங்கு துன்பம் விதைத்தாலும்
பாரிங்கு படைத்தோன் துணை போதும்



கவிஞர் மக்கொனையூராள்,இலங்கை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# வாராதிருப்பாயோ வானவில்லே?

வானவில்லே! வானவில்லே! எங்கே நீ தற்போது?
உனையேனோ காணலையே வான்வெளியில் இப்போது?
கண்கவரும் வண்ணங்களில், காலையிலும் மாலையிலும்
கண்டோமே சிறுவயதில் கதிரவனுக் கெதிர்திசையில்!
மழைநாளில் எங்கள் மனம்கவர்ந்த அதிசயம் நீ!

அறிவியல் பயில்கையிலே அறிமுகமாம் நிறப்பிரிகை!
அறிஞர் ஐசக் நியூட்டன்தான் உன்னுள்ளே
இருப்பன ஏழு வண்ணங்கள் என்றுரைத்தார்!
ஊதா, கருநீலம், நீலம் பச்சை,
மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பெனவே வண்ணங்கள்!

காற்றிலுள்ள மழைத்துளியில் கதிரவனின் ஒளிபட
நிறப்பிரிகை செய்கின்ற முப்பட்டகமாய் மாறிடுதே!
ஒளிவிலகல், எதிரொளிப்பு, ஒளிச்சிதறல் இவற்றாலே
பிரிகிறதே ஏழு வண்ணங்களும் கண்கவர!
சிறுவர்களும் பெரியோரும் உனைக்கண்டு களித்திடுவர்!

வாராமல் நீ போனதற்குக் காற்று மாசடைதல்
காரணம் என்கின்றார்! ஓசோனில் ஓட்டையொன்று
காற்றின் ஈரத்தைக் குறைக்கிறது என்கின்றார்!
இனிவருங் காலத்தில் உனைக்காண்பது அரிதென
மனக்கவலை அளிக்கின்ற செய்திதனை உரைக்கின்றார்!

கற்கால மனிதர்கள் கண்டதொரு வால்வெள்ளி
தற்போது மீண்டும் வந்துளதை அறிகின்றோம்!
இயற்கை எமக்களித்த கொடைகளில் ஒன்றாய்நீ
இல்லாமற் போனால் மனம்வாடும் அறியாயோ?
மனிதகுலத் தவறுகளை மன்னித் தருளாயோ?

இனியேனும் விழித்தெழுவோம்! இயற்கையைக் காத்திடுவோம்!
இனிவரும் தலைமுறைகள் கண்டு களித்திருக்க
வானவில்லின் வருகைக்கு வழிவகைகள் செய்திடுவோம்!
காற்று மாசடைதல் கணிசமாகக் குறைந்தாலே
வரவுதரும் வானவில்லும் வானத்தில் வழக்கம்போல்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி,புதுச்சேரி

# காதல் கடிதம்

தினமும் என்னைப்
பற்றி அணைக்கும்
கைகளுக்கே தெரியும்
என் மிடறு அவளுக்கு
மட்டுமே வளைந்து
கொடுக்கிறது என்று.
தினமும் சாயும்
தோள்களுக்கு தெரியும்
என் மிடறில் அவள்
மட்டும் தான்
தூங்குவாள் என்று.
தினமும் இறுக்கிப்
பிடிக்கும் கைகளுக்கு
தான் தெரியும் அவளது
ஆறு விரலும் என்னைப்
பற்றிக் கொள்கிறது என்று.
தினமும் நான் அனுப்பும்
குறுஞ்செய்திக்காக இரவு
முழுவதும் தூங்காமல்
விழித்திருக்கும் அவளது
விழித்திரைக்கே தெரியும்.
காதல் எவ்வளவு புனிதமானதென்று.
செல்லறிக்கும் வார்த்தைகளால்
என் செவிகளைச் சிறப்பிக்கும்
அவளது குரலுக்கு புரியும்.
யார் யாரிடம் தன் பிரிவை
கூறியதென்று.



கவிஞர் ச.சத்தியபானு

# வீரமா முனிவர்

கட்டுரை

## வீரமாமுனிவர் சிறப்பு



வீரமாமுனிவர்
1680 - 1747
தீந்தமிழ்க் காப்பியமாம்
தேம்பாவணி தந்தவர்

எழுத்து சீர்திருத்தம் செய்து, சில குறில் எழுத்துக்களையும் நெடில் எழுத்துக்களையும் வேறுபடுத்தி மாற்றம் செய்தார்

ஐந்திலக்கண நூலான "தொன்னூல் விளக்கம்" என்னும் இலக்கண நூலை படைத்தார். இதன் சிறப்பு கருதி இந்நூலை "குட்டித் தொல்காப்பியம்" என்பர்.
சதுரகராதி என்னும் அகராதி நூலை வெளியிட்டு பிற்கால அகராதி நூல்களுக்கெல்லாம் வழிகாட்டினார்.
தேம்பாவணி காப்பியத்திற்கு வீரமாமுனிவரே உரை வடித்துள்ளார்.
திருச்சியை ஆண்ட சந்தா சாகிப்பிடம் திவானாக பணி புரிந்தார்.
தனது பெயரை முதலில் "தைரியநாதர்" என மாற்றிக்கொண்டார்.
முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை.

## வாழ்க்கைக் குறிப்பு

காலம் = 1680-1747
இயற்பெயர் = கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
பெற்றோர் = கொண்டல் போபெஸ்கி, எலிசபெத்
பிறந்த ஊர் = இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன்
அறிந்த மொழிகள் = இத்தாலியம், இலத்தின், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்
தமிழ்க் கற்பித்தவர் = மதுரைச் சுப்ரதீபக் கவிராயர்

# வீரமா முனிவர்

கட்டுரை

## வீரமாமுனிவர் சிறப்பு பெயர்

- தமிழ் சிறுகதையின் முன்னோடி
- தமிழ் உரைநடையின் தந்தை
- எள்ளல் இலக்கிய வழிகாட்டி
- உரைநடை இலக்கிய முன்னோடி
- செந்தமிழ் தேசிகர்
- மொழிபெயர்ப்பு துறையின் வழிக்காட்டி
- வீரமாமுனிவர்(மதுரை தமிழ் சங்கம்)
- தமிழ் அகராதியின் தந்தை
- ஒப்பிலக்கண வாயில்
- தொகுப்புப்பணியின் வழிகாட்டி

## வீரமாமுனிவர் படைத்த காப்பியம்

- தேம்பாவணி (கிறித்தவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்)
- சிற்றிலக்கியம்
- திருக்காவலூர் கலம்பகம்
- கித்தேரி அம்மாள் அம்மானை
- அடைக்கல நாயகி வெண்பா
- அன்னை அழுங்கல் அந்தாதி
- கருணாகரப் பதிகம்



## உரைநடை

வேதியர் ஒழுக்கம்
வேத விளக்கம்
பேதகம் மறத்தல்
லூதர் இனதியல்பு

# வீரமா முனிவர்

கட்டுரை

## உரைநடை

லூதர் இனதியல்பு
ஞானக் கண்ணாடி
வாமணன் கதை
இலக்கணம்
தொன்னூல் விளக்கம் ("குட்டித் தொல்காப்பியம்" என்பர்)
கொடுந்தமிழ் இலக்கணம்
செந்தமிழ் இலக்கணம்

## மொழிபெயர்ப்பு

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தின் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்

## அகராதி

சதுரகராதி (தமிழின் முதல் அகராதி)
தமிழ்-இலத்தின் அகராதி
போர்த்துகீசியம்-தமிழ்-இலத்தின் அகராதி
ஏளன இலக்கியம்
பரமார்த்த குரு கதை
(தமிழின் முதல் ஏளன இலக்கியம்)




## தொகுப்பு

தமிழ் செய்யுள் தொகை

வீரமாமுனிவர் மறைந்த இடம் = அம்பலகாடு

அகர முதல

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
செயலை விதையுங்கள்; பழக்கம்
உருவாகும். பழக்கத்தை விதையுங்கள்;
பண்பு உருவாகும். பண்பை
விதையுங்கள்; எதிர்காலம் உருவாகும்.
/Aagaramuthalaa /www.aagaramuthalaa.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com